# முதுநிலை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்
# போக்குவரத்து பிரிவு, புதுச்சேரி

தேதி 27.02.2026

## பத்திரிக்கை செய்தி

நமது பாரத நாட்டின் மாண்புமிகு பிரதமர் திரு, நரேந்திர மோடி அவர்கள் வரும் 01.03.2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை நமது புதுச்சேரிக்கு வருகை தந்து லாஸ்பேட்டை ஹெலிபேட் மைதானத்தில் புதுச்சேரி அரசு சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விழாவில் கலந்துக்கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். இவ்விழாவில் புதுச்சேரி துணைநிலை ஆளுநர், முதலமைச்சர், சபாநாயகர், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், புதுவை அரசின் உயர் அதிகாரிகள், அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் புதுச்சேரி அதனை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து ஏராளமான பொதுமக்கள் பேருந்து, இலகுரக மற்றும் இருசக்கர வாகனங்களில் லாஸ்பேட்டைக்கு வந்து விழாவில் கலந்துக்கொள்ள உள்ளார்கள்.

இதனை முன்னிட்டு 01.03.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று புதுச்சேரி நகரம் மற்றும் சுற்றியுள்ள முக்கய சாலைகளில் வாகன நெறிசல் ஏற்படாமலும் பொதுமக்கள் பாதுகாப்பாகவும் சிரமமின்றியும் பயணிக்கும் பொருட்டும் புதுச்சேரி போக்குவரத்து காவல்துறை கீழ்க்கண்ட விரிவான போக்குவரத்து மாற்றம் மற்றும் வாகனநிறுத்தம் ஏற்பாடுகளை செய்துள்ளது:

- விழா நடைபெறும் லாஸ்பேட்டை பகுதி பாதுகாப்பு காரணங்களுக்காக தேவையற்ற வாகனங்கள் நுழைய தடைசெய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்படுகிறது,

- விழா நடைபெறும் லாஸ்பேட் ஹெலிபேட் மைதானம் மற்றும் அதன் அருகிலுள்ள சாலைகளில் மேற்படி விழாவில் கலந்துக்கொள்ள வரும் வாகனங்களைத்தவிற வேறு எந்தவித வாகனங்களும் காலை 06.00 மணி முதல் மாலை 03.00 மணி இயக்கவும் நிறுத்தவும் தடை விதிக்கப்படுகிறது.

- லாஸ்பேட் விமான நிலையச் சாலையில், ECR லதா ஸ்டீல் ஹவுஸ் சந்திப்பிலிருந்து விமான நிலையம் வரையும், ECR சாலையில் சிவாஜி சிலை சந்திப்பிலிருந்து ராஜிவ் காந்தி சதுக்கம் வரை கனரக, இலகுரக வாகனங்கள் மற்றும் பேருந்துகள் இயக்கவும் நிறுத்தவும் தடை செய்யப்படுகிறது.

- ECR சாலை வழியாக புதுச்சேரி நோக்கி வரும் வாகனங்கள் கோட்டக்குப்பம் ரவுண்டானாவில் முத்தியால்பேட்டை நோக்கி நேராக சென்று அஜந்தா சந்திப்பு, அண்ணா சாலை, 45அடி சாலை, பாலாஜி தியேட்டர் சந்திப்பு, பெரியார் சதுக்கம், நெல்லித்தோப்பு சந்திப்பு வழியாக புதிய பேருந்து நிலையம் அடையவும். புதுச்சேரியில் இருந்து ECR வழியாக சென்னை நோக்கி செல்லும் வாகனங்கள் மேற்கண்ட சாலைகளையே பயண்படுத்தவும்.

- விழா நடைபெறும் லாஸ்பேட் ஹெலிபேட் மைதானத்திற்கு முத்தியால்பேட் திசையிலிருந்து வரும் அழைப்பாளர்கள் அனைவரும் ECR சாலையில் மடுவுபேட் சந்திப்பில் வலதுபக்கம் திரும்பி, QR code வசதியை பயன்படுத்தி, லாஸ்பேட் கல்லூரி சாலை வழியாக தங்களது வாகனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் நிறுத்தவும்.

...2

- மேற்படி லாஸ்பேட் ஹெலிபேட் மைதானத்திற்கு ராஜிவ் காந்தி சந்திப்பிலிருந்து வரும் அழைப்பாளர்கள் அனைவரும் ECR சாலையில் லதா ஸ்டீல் சந்திப்பில் இடதுபக்கம் திரும்பி, QR code வசதியை பயன்படுத்தி, லாஸ்பேட் விமான நிலைய சாலை வழியாக தங்களது வாகனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் நிறுத்தவும்.

- விழா அழைப்பாளர்களுக்கு கீழ்கண்டவாறு வாகனம் நிறுத்த வசதி செய்யப்பட்டுள்ளது:

| வ. எண் | வாகனம் | நிறுத்துமிடம் |
|---|---|---|
| 1. | இலகுரக வாகனம் (VVIP) | தாகூர் கலை கல்லூரி மைதானம் |
| 2. | இலகுரக மற்றும் இருசக்கர வாகனம் (VVIP) | அரசு பெண்கள் பொறியியல் கல்லூரி மைதானம் |
| 3. | இலகுரக மற்றும் இருசக்கர வாகனம் (VVIP) | காஞ்சி மாமுனிவர் கல்லூரி மற்றும் தாகூர் கலை கல்லூரி மைதானம் |
| 4. | இலகுரக மற்றும் இருசக்கர வாகனம் (VVIP) | PWD வாகன நிறுத்துமிடம் |
| 5. | பேருந்து P1 | தீ அணைப்பு துறை/சமுதாய கூட மைதானம் |
| 6. | பேருந்து P2 | மோத்திலால் நேரு அரசு பாலிடெக்னிக் மைதானம் |
| 7. | பேருந்து P3 | வள்ளலார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி |
| 8. | பேருந்து P4 | தாகூர் கலை கல்லூரி மைதானம் |
| 9. | பேருந்து P5 | விவேகானந்தா மேல்நிலைபள்ளி மைதானம் |
| 10. | பேருந்து P6 | ECR புதிய பேருந்து நிலைய மைதானம் |

- பாரத பிரதமர் வருகை நாளான 01.03.2026 அன்று விமான நிலையம் நோக்கிச் செல்லும் விமான பயணிகள், விமான நிலைய சாலை வழியாக தாகூர் கலை கல்லூரி மைதானம் அடைந்து தங்களது வாகனங்களை நிறுத்திவிட்டு அங்கிருந்து புதுவை அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள Shuttle Bus மூலம் புதுச்சேரி விமான நிலையத்திற்குச் செல்லவும்.

பொதுமக்களும் சாலை பயண்பாட்டாளர்களும் மேலே கூறியுள்ள சாலை போக்குவரத்து மற்றும் வாகன நிறுத்தம் வழிமுறைகளை கடைப்பிடித்து போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்து புதுச்சேரி காவல் துறைக்கு ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு

**(திவ்யா.D., IPS)**
முதுநிலை காவல் கண்காணிப்பாளர்
(போக்குவரத்து), புதுச்சேரி

**OFFICE OF THE SENIOR SUPERINTENDENT OF POLICE (TRAFFIC)**
**PUDUCHERRY**

Date: 27.02.2026

**PRESS RELEASE**

The Hon'ble Prime Minister of India Shri. Narendra Modi, will visit Puducherry on 01.03.2026 (Sunday). He will participate in a Government function organized by the Government of Puducherry at the Lawspet Helipad Ground.

The Hon'ble Lieutenant Governor, Chief Minister, Speaker, Ministers, Members of Parliament and Legislative Assembly, Senior Government officials, political party leaders, and a large number of members of the public from Puducherry and surrounding areas are expected to attend the function by using buses, light vehicles, and two-wheelers.

In view of this, on 01.03.2026 (Sunday), to prevent traffic congestion and to ensure the safety and convenience of the general public, the Puducherry Traffic Police have made the following detailed traffic diversions and parking arrangements:

- The Lawspet function area has been declared a restricted zone for security reasons. Unauthorized vehicles will not be permitted to enter this area.

- On 01.03.2026, from 06:00 AM to 03:00 PM, no vehicles other than those authorized for the function will be allowed to ply or park on the roads surrounding the Lawspet and adjoining areas.

- On Lawspet Airport Road, from Steel House Junction at ECR to the Airport, and on ECR Road from Rajiv Gandhi Junction to Indira Gandhi Square, movement and parking of all heavy vehicles, light vehicles, and buses are prohibited.

- Vehicles coming to Puducherry via ECR shall proceed through: Kottakuppam Roundabout – Muthialpet - Ajanta Signal - Anna Salai - 45 Feet Road - Balaji Theatre Signal – Periar Square - Nellithope junction to reach New Bus Stand. Vehicles proceeding from Puducherry towards Chennai via ECR shall use the same routes.

- Vehicles coming from the Muthialpet side to function place shall turn right at Maduvupet Junction on ECR Road and to proceed via Lawspet College Road. They shall park their vehicles in the designated parking areas using the QR code facility provided.

- Vehicles coming from Rajiv Gandhi Junction on ECR shall turn left at Latha Steel junction and proceed via Airport Road. They shall park in the designated parking areas using the QR code facility provided.

…2

**Parking Arrangements for Function Attendees**

| Sl.No | Vehicles to be parked | Place of parking |
|---|---|---|
| 1. | Cars (VVIP) | Tagore Arts College Ground |
| 2. | Two Wheelers & Cars (VVIP) | Women's Engineering College Ground |
| 3. | Two Wheelers & Cars (VVIP) | Kanchimamunivar College & TAC Inside Ground |
| 4. | Two Wheelers & Cars (VVIP) | PWD Parking Place |
| 5. | Buses P1 | Fire Service & Community Hall Center Ground |
| 6. | Buses P2 | Mothilal Nehru Polytechnic College Ground |
| 7. | Buses P3 | Vallalar School Ground |
| 8. | Buses P4 | Tagore Arts College Ground |
| 9. | Buses P5 | Vivekanandha School Ground, ECR |
| 10. | Buses P6 | Govt. New Bus Stand, ECR |

On 01.03.2026, passengers traveling to the airport shall park their vehicles at Tagore Arts College Ground using Airport Road. From there, they shall use the shuttle buses arranged by the Government to reach Puducherry Airport.

The general public and road commuters are hereby requested to follow the above traffic diversions and parking arrangements to avoid traffic congestion and to extend their cooperation to the Puducherry Traffic Police.

Sd/-
(Divya.D., IPS)
Senior Superintendent of Police (Traffic)
Puducherry